
**மின்தமிழன் நா.கண்ணனின் நூல்கள்**

[place your orders @ https://pages.razorpay.com/KannanNoolgal]

# *திக்கெட்டும் தமிழ்*

## 3. திக்கெட்டும் தமிழ்




ஜெர்மனியில் வாழ்ந்த காலத்தில் பார்த்ததும், கேட்டதும் அவை எழுப்பிய கேள்விகளும் இத்தொகுப்பில் இடம் பெறுகின்றன. கீழேயுள்ள தலைப்புகள் நூலின் தன்மை பற்றிப் பேசும். குறிப்பாகச் சொல்ல முற்படின், அயலக இடப்பெயர்வுற்ற பின்னும் ஈழத்தமிழர்கள் ஏன் யூதர்கள் உருவாக்கியது போன்ற ஓர் வதை இலக்கியத்தைத் (ஹோலோகாஸ்ட் பதிவுகள்) தமிழுக்குத் தரவில்லை? என்ற ஆழமான கேள்வியை இந்த நூல் வைக்கிறது. அயலகத்திலிருந்து தமிழர்கள் தமிழ் வளர்ச்சிக்கும், தமிழ்நாடு முன்னேற்றத்திற்கும் எவ்வாறு உதவ முடியும் எனப் பல கோணங்களில் ஆராய்கிறது இந்நூல்!

1. அயல் மண்ணில் சாதிச் சண்டைகள்!
2. மெல்லத் தமிழினி உலகில் வெல்ல
3. அயலக வாழ்வும் ஊடகங்களும்
4. தொழில் முன்னேற்றமும் பெண் விடுதலையும்
5. அயலச் சிறார்களும் தமிழ் கற்றலும்
6. புலம்பெயர் பதிவுகள் – வதை இலக்கியம்
7. மலிவுப்பதிப்புகளும் நீர்த்துப் போகும் இலக்கியமும்

8. ஹைகூ, பொய்கூ, புதுக்கூ
9. இ-பேட்டி
10. சித்தி ஜுனைதா பேகமும் முதுசொம் இலக்கியக் கூடமும்
11. தொல்லிராமனாய்த் தோன்றிய கதைமுறை
12. யார் பிராமணன்?
13. பழமை, புதுமை, புரட்சி, தமிழன்
14. பாரதி என்ற புது ஆழ்வார்
15. ஆத்மார்த்த அமைதியும், தியானமும்
16. ஆஸ்திக்கு ஒரு ஆலயம் ஆசைக்கு ஒரு அம்பலம்

## அணிந்துரை

பேராசிரியர் முனைவர் ரெ.கார்த்திகேசு
தோற்றம்: 1940 மறைவு: 2016

கண்ணன் என்ற ஒரு மனிதரை நான் கண்டடைந்ததே இணையம் என ஒன்று தோன்றியதால்தான். என்னைப் பொறுத்தவரை கண்ணன் ஓர் இணைய உற்பத்தி. நீண்ட காலம் virtual realityஇல்தான் ஒருவருடன் ஒருவர் உரையாடிக் கொண்டிருந்தோம். அவர் ஜெர்மனியிலும் நான் மலேசியாவிலும் இருந்தது ஒரு பெரிதாகத் தோன்றவில்லை. அந்த நிழல் வெளி ஊடாடல்கள் மூலமாகவே ஒருவரைப் பற்றி ஒருவர் புரிந்து கொண்டவுடன் நட்பும் அன்பும் மலர்ந்தது.

ஆனால் கண்ணனும் சரி, நானும் சரி, நிஜ உலகில் பழகியவர்கள். (இப்போதுள்ள தலைமுறைக்கு அது அதிகம் முக்கியம் இல்லை எனத் தோன்றுகிறது.) நட்பு என்பது கண்கள் சந்திப்பதும் கைகள் தொடுவதும் தோளைத் தழுவுவதுமாக நாங்கள் அறிந்திருந்தோம். ஆகவே நிழல் உலகத் தொடர்பு நட்பை முழுமைப் படுத்தவில்லை.

2000ஆம் ஆண்டில் காலச்சுவடு நடத்திய தமிழினி 2000 மாநாட்டில்தான் நான் அவரை முதலில் கண்டேன். புகைப்படங்கள் பார்த்திருந்தாலும், அவரை நான் கற்பனை செய்து வைத்திருந்த மனப்படத்தில் கொஞ்சம் வைதீகப் பழமை தோய்ந்த ஐயங்காராகத்தான் இருந்தார்.

ஆனால் என்னைத் தேடி ஓடி வந்த மனிதர் முற்றிலும் நவீனமான தோற்றத்தில் இருந்தார். கொஞ்சம் சீனம், ஸ்பானியம், வெள்ளைக்காரக் கலப்புள்ள முகம். அகன்ற சிரிப்பே உள்ளத்தின் விரிவை அறிமுகப் படுத்தியது. கை கொடுத்து தோள் தழுவி அன்றிலிருந்து நிஜ உலக நண்பர்களானோம்.

எங்கள் சொந்தப் பிரலாபங்கள் போதும்.

கண்ணன் அடிப்படையில் விஞ்ஞானி. இன்றும் விஞ்ஞான ஆய்வும் போதனையும் படைப்பும் பயிற்சியும்தான்அவரது முழு நேரப் பணி; அவருக்கு ரொட்டியும் வெண்ணையும் வீட்டு வாடகையும் அதிலிருந்துதான் கிடைக்கின்றன. ஜெர்மனியும் ஜப்பானும், கொரியாவும் இன்று மலேசியாவும் அவருக்கு வாழ்விடங்கள்.

ஆனால் அவர் மதுரைக்காரர் என்ற பழைய வாசனை அவரை விட்டுக் கொஞ்சமும் நீங்கவில்லை. பொதுவாகவே வாழ்க்கையும் சுற்றுலகமும் எவ்வளவு மாறிவிட்டாலும் மனிதன் தன் வேர்களை மறக்கக் கூடாது என்பதே அவருடைய கொள்கை. அவருடைய கட்டுரையிலேயே அவர் அதை வலியுறுத்துவதைக் காணலாம்:

“மனிதன் அடிப்படையில் மண்ணைச் செர்ந்தவன். மரங்களுக்கு மட்டும்தான் வேர் உண்டு என்று நம்புவது தவறு, மனிதர்களுக்கும் வேர் உண்டு. அது மண் சார்ந்தது. நமது பண்பாட்டு விழுமியங்கள் அனைத்தும் தமிழ் மண்ணின் இயல்பு சார்ந்தது.”

வேர்களின் புராதனமும் அறிவியல் கொண்டுவரும் புதுமைகளும் ஒன்றுக்கொன்று நிறைந்த தொடர்புடையவை என்பது அவர் நம்பிக்கை. அதை ஒரு சிறுகதையில் அவர் மிக நயமாகக் குறிப்பிட்டிருப்பதை முன்பே ஓரிடத்தில் அவருடைய சிறுகதைகள் பற்றி எழுதியபோது நான் குறிபிட்டேன். அது இந்த நூலுக்கு அந்நியமாயினும் (எதும் எதற்கும் அந்நியமில்லை என்னும் அவர் நம்பிக்கைப்படி) இங்கேயும் செல்லும் என்பதால் பதிவு செய்கிறேன்:

“பொருண்மை அற்ற போழ்துகளில்” என்னும் கதையில் கதையின் நாயகன் நியூ யோர்க்கில் அறிவியல் கழகத்தில் ஐன்ஸ்டீனின் ரிலேட்டிவிட்டி தத்துவத்தைப் பற்றிப் பேசுகிறான். அடுத்த காட்சியில் அவனுடைய தாய் சென்னையில் பாகவத உபன்யாசம் கேட்கப் போகிறாள். அங்கே நியூ யோர்க்கில் “பொருண்மை என்ற ஸ்தூலமான வஸ்து திரியும்போது சக்தியாக மாறுகிறது. … இரண்டு நீர்வளி அணுக்கள் இணையும் போது கொஞ்சம் பொருண்மை இழப்பு நடக்கிறது. அந்த இழப்பானது சக்தியாக மாறிவிடுகிறது” என்ற இயற்பியல் விரிவுரை நடக்கிறது. சென்னையில் பாகவதர் “இதைத்தான் ‘சிவன்’ ‘சக்தி’ என்கிறோம். தமிழில் இடது வலது என மின்சாரத்திற்குச் சொல்கிறோமே, அதுதான் மிகவும் பொருத்தம். ஏனென்றால் ஈசுவரன் வலப் பக்கமும் அம்பாள் இடப்பக்கமும் இருப்பதுதான் அர்த்தநாரீஸ்வரர் கோலம்” என உபன்யாசம் நடக்கிறது. இப்படியாக சினிமாவில் காட்சிகள் வெட்டி வெட்டி வருவதுபோல இந்த இரண்டையும் காட்டி அதில் தமது கற்பனைத் திறனையும் சேர்த்து கதையாக்குகிறார்.

இது கண்ணனைப் புரிந்து கொள்ள ஓர் ஆரம்பமாக அமையும்.

தமிழ் இணையத்தின் தொடக்க காலம் முதலே அந்த “ஜோதி”யைக் கண்டு கொண்டு அதில் ஐக்கியமானவர் கண்ணன். அதன் பின் தமிழ் இணையம் அவருடைய தமிழார்வம், தமிழ் இலக்கிய ஈடுபாடு, உற்பத்தி, தமிழ்ச் சமூகத்தை அறிந்து கொள்ளும் மற்றும் செழுமைப் படுத்தும் முயற்சிகளுக்கு எல்லாம் அவருக்கு ஒரு கருவியாகவே ஆகிற்று. பல விதங்களில் இணைய வசதிகளை தமிழ் உலகம் பயன் படுத்திக் கொள்வதில் அவர் ஒரு பிரச்சாரகராகவும்,

போதகராகவும் விளங்கினார் என்றே சொல்லலாம். பல புதிய இணைய முயற்சிகளை அவரே தொடங்கி வைக்கவும் செய்தார்.

தமிழ் மரபு அறக்கட்டளை அவற்றுள் ஒன்று. அந்த உன்னத முயற்சி பற்றி அவரே இதில் எழுதியுள்ள கட்டுரை விளக்குகிறது. தமிழ் மரபு அறக்கட்டளையில் பழைய சுவடிகளை வருடி வைத்துக் காக்க வேண்டும் என்ற முயற்சி தொடங்கியதும் அவரே தமிழ் நாட்டில் ஒற்றையாளாக ஓடியாடி அதனைச் செய்தார். பின்னர் ஒத்த மனதுடையவர்கள் பலர் அதில் ஒன்று சேர்ந்தார்கள். அண்ணாமலை சுகுமாரன் என்னும் த.ம.அ. அன்பர், சுவடி தேடும் தீவிரத்தில் தமிழ்த்தாத்தா உ.வே.சா.வை ஒத்தவர். (அவருடைய சுவடி தேடும் அனுபவங்கள் இன்னொரு நூலாய்ப் பதிப்பிக்கத் தக்கன.) தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் ஒத்துழைப்பும் சேர்ந்தது. நிறையச் சுவடிகள் சேர்க்கப்பட்டுள்ளன. விரைவில் பல புதிய கண்டுபிடிப்புக்கள் அவற்றிலிலிருந்து வரலாம் என்பது எனது எதிர்பார்ப்பு.

இவற்றிலெல்லாம் இன்னொரு மலேசியரான (இப்போது ஜெர்மானியர்) சுபாஷிணி டிரெம்மல்லின் பங்களிப்பும் மிக முக்கியமானதாகும். கண்ணனின் தமிழுலகு பற்றிய உந்துதலும் உற்சாகமும், சுபாவின் அயராத உழைப்பும் சேர்ந்த ஒட்டு மொத்த ஆற்றல் (synergy) தமிழ் மரபுக்கட்டளையின் உயிர்ப்பான செயல்பாடுகளுக்கான முக்கிய காரணம் எனலாம்.

அச்சில் வரும் கண்ணனின் இந்தக் கட்டுரைகள் தமிழ் மரபு அறக்கட்டளையை தமிழ் உலகத்துக்கு அறிமுகப்படுத்த மேலும் ஒரு நல்ல தொடக்கம். கண்ணன் த.ம.அ.கட்டளையின் தலைசிறந்த பிரதிநிதி என்றாலும், அந்தத் தளத்தில் மின் தமிழில் தங்கள் திறனால் தமிழ் வளர்க்கும் இன்னும் பல அறிஞர்களும் இருக்கிறார்கள். அவர்கள் பல தனித்தனி  இழைகளில் வெவ்வேறு தலைப்புக்களை அலசுகிறார்கள். மரபிலக்கியமும் புத்திலக்கியமும் பேசுகிறார்கள்; வைணவ இலக்கியமும் சைவ இலக்கியமும் பேசுகிறார்கள்; சமணமும் பௌத்தமும் பேசுகிறார்கள்; கார்ல் மார்க்ஸ், ஆடம் ஸ்மித் பொருளாதாரக் கொள்கைகள் பேசுகிறார்கள்; வானநூல் பேசுகிறார்கள்; சமக்கிருத, தமிழ் மொழிகளின், அவற்றின் இலக்கணங்களின் இலக்கியங்களின் ஒப்பீடு பேசுகிறார்கள்; தமிழக, இலங்கை அரசியல் பேசுகிறார்கள்; பயண அனுபவம் பேசுகிறார்கள்; சமையலும் கைமருத்துவமும் பேசுகிறார்கள்; தங்கள் தங்கள் நாடுகளில் நடைபெறும் தமிழ் நிகழ்ச்சிகள் பற்றியும் பேசுகிறார்கள். இவற்றில் பல தனித்தனி நூல்களாக வெளியிடப்பட்டு இணையத்திற்கு வெளியேயும் பரப்புவதற்குத் தகுதியானவை.

இவை பற்றிக் கண்ணனின் பார்வை இப்படி:

“மின்வெளி என்பது தமிழுக்கு புதியதொரு வீச்சைத் தந்திருப்பது உண்மை. முதலில் அச்சுத் தொழிலின் கைப்பாவையாக இருக்கும் தமிழ்,  மெல்ல மெல்ல வெளியே வருகிறது. சிற்றிதழ், பேரிதழ், வணிக இதழ் என்று வட்டம் போட்டுக் கும்மியடிக்கும் கூட்டத்திலிருந்து தனிமனிதனை விடுதலை செய்து, அவனது ஆக்கம் பலருக்கு அச்சுப் பத்திரிக்கையின் உதவியின்றி கிடைக்கச் செய்துள்ளது. படைப்பாளியே பதிப்பாளனாகவும் மாறும் வித்தையெல்லாம் மின்வெளியில் நடக்கிறது. சமீபத்திய 'திசைகள்' கட்டுரை இதைப்பற்றிப் பேசுகிறது. மின்வெளியில்

படைப்பிற்கும், வாசகனுக்கும் உள்ள தொலைவு மிகக் குறைந்து விட்டது. ஏறக்குறைய கவிதை பிறக்கும் போதே அது எடை போடப்படுகிறது. வாசகனுக்கு படைப்பாளியும், படைப்பளிக்கு வாசகனும் உந்து சக்தியாய் இயங்கும் ஒரு தளத்தை மின்வெளி-இணையம் வழங்குகிறது. மேலும் 'அச்சமும், பேதமையும் நாய்களுக்கு' என்று பாரதி சொன்னது மின்வெளியில்தான் உண்மையாக நடக்கிறது. மின்வெளி சாதி பார்ப்பதில்லை, பால்வேறுபாடு பார்ப்பதில்லை, படித்தவன், பாமரன் என்ற பேதம் கூடப் பார்ப்பதில்லை.”

அற்புதம்! மின் வெளியில் நடக்கும் இந்த அற்புதத்தை அச்சு வெளியிலும் பரப்புவது இந்த நூலின் நோக்கம். ஒரு காலத்தில் மின் வெளி அச்சு வெளியை வெல்லும். ஆனால் இப்போதைக்கு மிக நல்ல அறிஞர்கள் பலர் அச்சு வெளிக்குள்ளேயே உலவ விரும்புவதே இந்த அச்சுப் பிரதியின் அவசியம். இந்த முயற்சி இன்னும் பல முயற்சிகளுக்குத் தொடக்கமாக அமைய வேண்டும்.

அன்புடன்,

முனைவர் ரெ.கார்த்திகேசு
முன்னாள் தொடர்புத் துறைப் பேராசிரியர்,
மலேசியா.